**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 211/2023**

திரு. தினேஷ்குமார் (P.W. –1) **14.10.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா என்னுடைய பாட்டனார் முதலில் தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். தாவா தாக்கல் செய்த தேதியில் என்னுடைய வயது என்னவென்றால் ஒன்பது. ஆகையால், தாவா விபரங்கள் அனைத்தும் மற்றவர்கள் சொல்லித் தெரியும் என்றால் சரி. என்னுடைய தகப்பனார் சொல்லியுள்ளார். என்னுடைய தாயார் மற்றும் என்னுடைய பாட்டி எங்களுடைய சொத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரி. என்னுடைய அப்பாவின் அம்மா தாவாவிற்காக நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியும் என்றால் முடியாது அவருக்கு உடல்நிலை சரியில்லை.

2. தாவா தாக்கல் செய்த போது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் இருந்த வாழை மரங்கள், மின் மோட்டார், வயர்கள் ஆகியவற்றை சேதம் செய்த பிறகு தாக்கல் செய்தோம் என்றால் பொய். அதைப் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பா சொல்லி உள்ளார். அந்த சமயத்தில் என்னுடைய தாத்தா பெயரில் பிரதிவாதி வகையறா அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய தாத்தா பிரதிவாதியின் மேல் புகார் கொடுத்த விவரங்களை சொல்லி உள்ளார்.

3. என்னுடைய தாத்தா கொடுத்த புகார் விசாரணை விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். விசாரணை நடந்து ஒரு வாரம் கழித்து தடம் விடப்பட்டதால்

நீதிமன்றத்திற்குச் சென்று பார்த்துக் கொள்ளுமாறு காவல் அதிகாரிகள் சொன்னார்கள். க.ச.எண்.378/1பி சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என்னுடைய தாத்தாவின் சகோதரருக்கு பாத்தியப்பட்டது. அதை பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளார். தற்சமயம் அந்த சொத்தில் உரிமையாளர் யார் என்றால் பிரதிவாதி. அந்த சொத்தில் பிரதிவாதி எப்போது இருந்து கிரயம் பெற்று சுவாதீனத்திலிருந்து வருகிறார் என்றால் 1984 ஆம் வருடத்தில் இருந்து சுவாதினத்தில் இருந்து வருகிறார்.

4. நான் பிறப்பதற்கு முன்பு இருந்து பழனிச்சாமி பிரதிவாதி சொத்துக்களை கிரையம் பெற்று 1984 ஆம் வருடத்தில் இருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரி. பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தில் விஸ்தீரணம் என்ன என்றால் 1.84 ஏக்கர். யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் பெரிய தாத்தா பழனிச்சாமிடம் இருந்து கிரயம் பெற்றார். அவர்தான் என்னுடைய தாத்தாவின் சகோதரர் என்றால் சரி. என்னுடைய பெரிய தாத்தாவின் மைனர் மக்களிடம் இருந்தும் சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. 16.10.1984 ம்தேதி க.ச.எண்.378/1ஏ சொத்திலும் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளார் என்றால் தெரியும். அதன் விஸ்தீரணம் என்னவென்றால் 0.53 செண்ட். அதை யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் நாச்சிமுத்து என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார்.

5. பிரதிவாதிக்கு சொத்துக்களை விற்ற நபர்கள் என்னுடைய நெருங்கிய உறவினர்கள் என்றால் சரி. விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் விற்பனை செய்த நபர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டவை என்றால் ஆமாம். கிரையம் செய்யப்பட்ட ஆவணங்களில் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்டு சுவதீனத்தில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த ஆவணங்களில் விற்பனை

செய்யப்பட்ட சொத்துக்கள் வாய்மொழியாக ஏற்பட்ட பாகப்பிரிவுகளின் படி கிடைக்கப்பெற்றதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால், வாய்மொழியாக பாகம் ஏற்பட்டது. வழக்கிற்காக வாய்மொழி பாகம் ஏற்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

6. 16 அடி பாதை உரிமை உள்ளதாக தாவாவில் சொல்கிறேன். அந்த விபரங்கள் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட ஆவணங்களில் இல்லை என்றால் சரி. ஆனால், பாதையை உபயோகம் செய்து வருகிறேன். பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்களில் க.ச.எண்.378/1சி சொத்தை நான் சென்றடைவதற்கு பாதை உரிமை எதுவும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரி. ஆனால் நான் அனுபவம் செய்கிறேன். பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின்படி இல்லாத ஒரு உரிமையை போடுவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள தாவாவே தவறு.

7. ஆவணங்களில் பாதை உள்ளதாக குறிப்புகள் இல்லாததால் என்னுடைய தாவாவே சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் தவறு. உட்பிரிவுகளின் படி பாதை உள்ளது. வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதை பொறுத்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. தாக்கல் செய்துள்ளேன். 16 அடி வண்டி பாதை உரிமை அதை அனுபவம் செய்வதற்கும் எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 16 அடி பாதை பூமியில் அனுபவத்தில் இருந்திருந்தால் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் அதற்கு தகுந்தவாறு சொத்துக்கள் கழிக்கப்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்தால் அந்த விவரங்கள் பிரதிவாதி கிரயம் பெற்ற ஆவணங்களில் சொல்லப்பட்டிருக்கும் என்றால் தவறு.

8. நான் முதல் விசாரணையுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் தாவா பாதையை பொறுத்து குறிப்புக்கள் இல்லை என்றால் சரி. பிரதிவாதி

தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு பதில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. ஆகையால், 16 அடி பாதை உரிமை உள்ளதாக சொல்வதே கற்பனையானது என்றால் சரியல்ல. க.ச.எண்.378/1 சி சொத்துக்கள் எங்களுடைய சொத்துக்கள், அதில் பாதைகள் உடையது என்றால் சரி. தற்சமயம் அதில் விவசாயம் செய்யவில்லை என்றால் தவறு. மானாவாரி பயிர் செய்து வருகிறோம். மழை பெய்த சமயத்தில் விவசாயம் செய்வோம் என்றால் சரி. என்னுடைய சொத்துக்களில் நான் பாசன முறையில் விவசாயம் செய்யவில்லை என்றால் சரி.

9. வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை சோளப்பயிர் பயிரிடுவோம் என்றால் சரி. அதற்குரிய சிட்டா, அடங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. எப்போதாவது பூமிக்கு நாங்கள் செல்வதால் அந்த சொத்திற்கு நிரந்தர பாதையே தேவையில்லை என்றால் சரியல்ல. எங்களுடைய சொத்தில் கற்களும் உடைத்து வருகிறோம். அதற்காக சென்று வருகிறோம். தாவாவில் நான் கோரியுள்ள பரிகாரம் தவறு என்றால் சரியல்ல.

10. க.ச.எண்.378/2 ஏ மற்றும் 380/3 சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. அந்த சொத்துக்கள் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் க.ச..எண்.378/2 ஏ பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. மற்றொரு சொத்து யாருடையது என்று எனக்கு தெரியாது. அந்த சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. அதில் கிணறு உள்ளது, போர்வெல் உள்ளது என்றால் தெரியாது. அந்த இரண்டு சொத்துக்களும் பிரதிவாதிக்கு பூர்விக வகையில் பாத்தியப்பட்டவை என்றால் தெரியாது.

11. என்னுடைய சொத்துக்களுக்கு எப்போது கடைசியாக சென்றேன் என்றால் சோளப்பயிர் அறுப்பதற்காக சென்றேன். மேலே சொன்ன பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் சொத்தில் இருந்து எவ்வளவு

தூரத்தில் உள்ளது என்றால் பக்கத்தில் உள்ளது. க.ச.எண்.378/1ஏ மற்றும் 378/1பி சொத்துக்களுக்கு க.ச.எண்.380/3 சொத்தில் இருந்து பூமிக்கு அடியில் பைப்புகள் அமைக்கப்பட்டு பிரதிவாதி விவசாயம் செய்து வருகிறார் என்றால் விவசாயம் செய்து வருவது தெரியும். பூமிக்கு அடியில் பைப்புகள் அமைக்கப்பட்டது தெரியாது. பிரதிவாதிக்கு விவசாயம் மட்டும்தான் தொழில் என்றால் சரி. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் மற்றும் பெட்ரோல் பங்க் வைத்துள்ளேன்.

12. பிரதிவாதியின் சொத்து பிஏபி வாய்க்கால் வசதி உள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதி அவருடைய சொத்துக்கு விவசாயத்திற்காக கிணறு, போர்வெல் மற்றும் பிஏபி வாய்க்கால் தண்ணீரை பயன்படுத்தி வருகிறார் என்றால் சரி. க.ச.எண். 378/1பி சொத்தில் பிரதிவாதி என்ன பயிர் செய்து வந்தார் என்றால் சோளப்பயிர் செய்து வந்தார். வாழை பயிர் செய்து வந்தார் என்றால் எனக்குத் தெரிந்து. அவ்வாறு பதிவு செய்யவில்லை. பிரதிவாதி அவருடைய சொத்தை வறண்ட பூமியாக இருந்ததை வளம் உள்ள பூமியாக மாற்றியதை பொறாமை குணத்தில் அழித்துவிட்டேன் என்றால் பொய். அதைப் பற்றி எனக்கு தெரியாது என்றால் என் அப்பாவோ தாத்தாவோ அதைப் பற்றிய என்னிடம் சொன்னதில்லை.

13. பிரதிவாதி சொத்திற்கு அருகே என்னுடைய பாட்டனார் குவாரி தொழில் செய்து வந்தார் என்றால் சரி. அந்தத் தொழில் சட்டத்திற்கு புறம்பாக என்னுடைய பாட்டனார் செய்து வந்தார் என்றால் தவறு. முறையாக மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற்றுள்ளார். பிரதிவாதி மற்றும் ஊர் மக்கள் என்னுடைய பாட்டனார் குவாரி தொழில் செய்வதின் மூலம் அவர்களுடைய விவசாயம் மற்றும் கால்நடைகளுக்கு வெடி சத்தத்தினால் பாதிப்பு ஏற்படுவதாக அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் மாவட்ட ஆட்சியரிடம் புகார்

கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஈஸ்வரமூர்த்தியும், சிதம்பரமும் புகார் கொடுத்தார்கள் என்றால் தெரியாது.

14. என்னுடைய பாட்டனார் அவருடைய வியாபாரம் மற்றும் விவசாயத்திற்காக பிரதிவாதியின் பூமியில் பாதையை ஏற்படுத்தி பயன்படுத்த முயற்சித்ததை பிரதிவாதி தடுத்தார் என்றால் சரி. அதனால் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. என்னுடைய தாத்தா குவாரி தொழிலுக்காக லாரி மற்றும் கனரக வாகனங்களை பாதையில் எடுத்துச் சென்றதால் தான் பிரச்சனை என்றால் சரியாகத் தெரியாது. என்னுடைய தாத்தா விவசாய தொழிலுக்காக லாரி மற்றும் கனரக வாகனங்களை பாதையில் எடுத்துச் செல்லவில்லை என்றால் சரி.

15. என்னுடைய தாத்தா குவாரி தொழிலுக்காக கனரக வாகனங்களை பயன்படுத்தியதால் பிரதிவாதியின் சொத்துகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது என்றால் தவறு. தளத்தில் எடுத்துச் சென்றார். இல்லாத தடத்தில் எப்படி என்னுடைய தாத்தா வாகனங்களை எடுத்துச் சென்று இருக்க முடியும் என்றால் அந்தப் பாதை மட்டும்தான் எங்களுக்கு வழி. எங்களுடைய சொத்துக்கள் வறண்ட பூமி என்பதால் எங்களுக்கு நிரந்தரபாதை தேவை இல்லை என்றால் தவறு. கல் குவாரிக்கு தேவைப்படுகிறது. கல் குவாரியை எந்த வருடத்தில் இருந்து நடத்தி வருகிறோம் என்றால் 2005 ஆம் வருடத்தில் இருந்து நடத்தி வருகிறோம். குவாரி நடத்துவதற்கு ஊர் பொதுமக்கள் ஆட்சேபனை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

16. கனரக வாகனங்களில் பெரிய பாறைகளை எடுத்துச் செல்வோம் என்றால் ஆமாம். அதனால் பிரதிவாதியின் விவசாய பூமிக்கும் பயிர்களுக்கும் அதிக பாதிப்பு ஏற்படுகிறது என்றால் தவறு. பிரதிவாதியின் சொத்தின் மதிப்பே குறைந்து போகும் என்றால் தவறு. தற்போது கனரக வாகனங்கள்

இயக்குவதில்லை என்றால் சரி. தற்போது குவாரி தொழிலை நிறுத்தி விட்டோம் என்றால் தவறு. டிராக்டர் மூலம் செய்து வருகிறோம். டிராக்டர் மூலம் குவாரி தொழில் செய்கிறீர்களா என்றால் இல்லை. விவசாயம் செய்து வருகிறோம்.

17. கனரக வாகனங்களை கொண்டு சென்றதால் எங்களுடைய பிரதிவாதியின் சொத்து கூடுதல் சுமை ஏற்பட்டுவிட்டது என்றால் தவறு. பிரதிவாதியின் பூமிக்கும் பயிர்களுக்கும் அதிக நஷ்ட ஈடு செய்துவிட்டேன் என்றால் தவறு. பிரதிவாதி அவருடைய சொத்துக்களை காப்பாற்ற வேண்டும் என்றால் சரி. பிரதிவாதியின் சொத்தில் நாங்கள் வாகனங்களை கொண்டு இயக்கக் கூடாது என்றால் தடத்தில் மட்டும் உபயோகம் செய்கிறோம். என்னுடைய பாட்டனார் பிரதிவாதியின் சொத்தில் உள்ள வாழை மரங்களை அழித்து பாதையை அமைக்க முயன்றார் என்றால் தவறு. தாவா பாதை வெகு நாட்களாக பயன்பாட்டில் உள்ளதாக தவறாக கூறுகிறோம் என்றால் சரியல்ல.

18. வா.சா.ஆ– 8 முதல் 10 அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. அந்த ஆவணங்களே பொய்யானது என்றால் தவறு.அந்த ஆவணங்களுக்கும் பிரதிவாதிக்கும் சம்பந்தமே இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ– 8 முதல் 10 வண்டி பாதையை பொறுத்து குறிப்புக்கள் இல்லை. என்னுடைய பாட்டனார் அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று சரத்து உள்ளது என்றால் தவறு. டிரிப்சீட் ஆவணம் ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல என்றால் தவறு. ட்ரிப் சீட்டுகள் தாவாவிற்காக தயார் செய்து உள்ளீர்கள் என்றால் சரியல்ல.

19. வருவாய்த் துறையிலும், காவல்துறையிலும் எங்களுக்கு நல்ல செல்வாக்கு உள்ளது என்றால் தவறு. அவிநாசி பாளையம் காவல் நிலையத்தில் நாங்கள் கொடுத்த புகாரை விசாரணையின் போது காவல்துறை

அதிகாரிகள் உரிமையியல் பிரச்சனை என்று சொன்னார்கள் என்றால் சரி. அவிநாசி பாளையம் காவல் நிலையத்தில் என்னுடைய தாத்தா பாட்டியின் மீது பிரதிவாதி கொடுத்த புகார் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.எண். 323/2010 வழக்கு பிரதிவாதி தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியும் என்றால் சரி. என் அப்பா சொல்லி உள்ளார். அதன் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். அ.வ.எண். 323/2010 இந்த வழக்கு பிரதிவாதி அந்த தாவாவில் அந்த வழக்கு சொத்துக்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி.

20. என்னுடைய தாத்தா அந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கு நடத்தி வந்தார் என்றால் தெரியாது. அந்த வழக்கத்திற்கு பிறகு தான் அசல் வழக்கில் 211/2023 தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் தவறு. அந்த வழக்கை அவசரமாக தாக்கல் செய்து என்னுடைய பாட்டனார் சொத்துக்களை பார்வையிட நீதிமன்ற ஆணையாளர் நியமனம் பெற்றுள்ளார் என்றால் தவறு. நீதிமன்ற ஆணையாளர் அறிவிப்பை கொடுக்காமல் சொத்துக்களை பார்வையிட்டார் என்றால் தெரியாது. தாவா சொத்தை பற்றி எங்களுடைய தாவாவில் தடம் இல்லாத சொத்தாக வாதுரைத்துள்ளோம் என்றால் தவறு. அதனால்தான் தாவா பாதையை புதிதாக ஏற்படுத்த முயற்சிக்கிறோம் என்றால் தவறு.

21. பிரதிவாதியின் சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் வருவாய் துறையினரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அ.வ.எண். 458/2010 முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூரில் என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாகம்கோரி தாக்கல் செய்ததுள்ளோம். அந்த வழக்கில் பாதை மறுத்து பிரதிவாதி வழக்கு நடத்து வருகிறார் என்றால் தவறு. வாய்மொழி பாகப்பிரிவினை ஒப்புக் கொண்டுள்ளார். தாவாவில் தாக்கல்

செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடமே தவறு என்றால் சரியல்ல. தாவாவில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உண்மை தன்மை உடையவை அல்ல என்றால் தவறு.

22. பிரதிவாதியின் உரிமைகளை மறுப்பதற்காக தான் அசல் வழக்கில் நானும் 458/2010 தாக்கல் செய்துள்ளோம் என்றால் தவறு. வாய்மொழி பாகமே ஏற்படவில்லை. அதன் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளது என்றால் தவறு. அசல் வழக்கு எண்.211/2023 தள்ளுபடி செய்யப்பட வேண்டும். பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.323/2010 செலவு தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.10.14 17:55:07 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.